தீபம் : 02

# ஆத்மஜோதி

ஒளி : 16

ஆத்மீக மாத சஞ்சிகை

ஆவணி- 2006

ஏழாலை உப அலுவலகம்
25 JUL 2006
கொள்ளப்பட்டது



## நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்று

துறவி ஒருவரிடம் அவரது சீடர்கள் தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெற்று வந்தனர்.

அப்போது ஒரு சீடன் "பற்றுக்களை விட்டால்தான் இறைவனை அடையமுடியுமா? பற்றுக்களை வைத்துக்கொண்டே நாம் முயற்சி செய்து இறைவனை அடைய முடியாதா?" என்று கேட்டான்.

உடனே துறவி அந்தச் சீடனை அழைத்துக் கொண்டு ஆற்றங் கரைக்குச் சென்று அங்கு இருந்த படகு ஒன்றில் அமரச் சொன்னார். படகு, கரையில் இருந்த மரத்தில் கட்டப்பட்டிருந்தது. "படகில் துடுப்பு இருக்கின்றது. துடுப்புப் போட்டு அக்கரைக்கு படகைச் செலுத்து" என்றார் துறவி. அவனும் இயன்ற மட்டும் துடுப்புப் போட்டும் படகு நகரவேயில்லை.

சிறிது நேரம் சென்றதும், சீடனைப் பார்த்து அவர் "இவ்வளவு நேரம் துடுப்புப் போட்டாயே, படகு எவ்வளவு தூரம் சென்றுள்ளது?" என்று கேட்டார்.

"துறவியாரே! நீங்கள் சொன்னதினால்தான் துடுப்புப் போட்டேன். நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் இந்தப் படகு ஓரடி தூரம் கூட நகராது" என்றான் சீடன்.

"ஏன் நகராது?" என்று கேட்டார் துறவி.

"படகுதான் மரத்தில் கட்டப்பட்டு உள்ளதே... எப்படி நகரும்?" என்றான் அவன்.

"சிறு கயிற்றால் கட்டப்பட்டுள்ள படகு என்ன முயற்சி செய்தாலும் நகராது, கயிறை அறுக்காமல் படகு செல்லாது என்கிறாய். இந்தக் கயிற்றைவிடப் பற்றுக்கள் மிக வலிமையானவை. இறைவனை நாம் அடையாவண்ணம் தடுக்கும் ஆற்றல் மிக்கவை. பற்றுக்களை நீக்காமல் என்ன முயற்சி செய்தாலும் பயன் தராது. இந்த உண்மை இப்பொழுது உனக்குப் புரிகிறதா?" என்று கேட்டார் துறவி.

"துறவியாரே! அறியாமையால் இதைக் கேட்டுவிட்டேன். என்னை மன்னியுங்கள்" என்றான் சீடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்



சிவமயம்

**ஆத்மஜோதி**

தாபிதம் : 1948

**ARTHMA JOTHY**

Est. 1948

ISSN 17039185

தீபம் : ஒளி
பார்திப வருடம்
ஆவணி
2006

பதிப்பாசிரியர்

நா. முருகையா
தியான
மணிமண்டபம்

எழுத்தமைப்பும்
அச்சுப் பதிப்பும்
ஐய்ராம்
பிறின்ரேஸ்

வெளியீடு
ஆத்மஜோதி
தியான
மணிமண்டபம்
ஏழாலை.

தொடர்பு முகவரி
நா.முருகையா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

## உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | நல்லூரான் திருவடி | 02 |
| 2. | நல்லைநகர்த் திருப்புகழ் | 03 |
| 3. | நல்லூர்க் கந்தனுக்கு நல்லதோர் அர்ச்சனை | 04 |
| 4. | சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை | 07 |
| 5. | ஆத்மஜோதி அலர்ந்ததென்...... | 08 |
| 6. | ஆன்மீக வள்ளல், ஞானசுரபி..... | 09 |
| 7. | பலராலும் போற்றப்படும் உத்தமர்... | 11 |
| 8. | நல்லூரின் பெருமை | 12 |
| 9. | தியானம் | 15 |
| 10. | சடைவரதர் தரிசனம் | 21 |
| 11. | திருமூலர் திருமந்திரம் | 24 |
| 12. | கரைந்துண்ணும் காக்கைபோல்... | 27 |
| 13. | சூரிய வழிபாட்டின் சிறப்பு | 29 |
| 14. | நிஜத்தை நேசி பொய்யைப் புதை | 30 |
| 15. | ஆத்திசூடி-விளக்கத்துடன்(22-28) | 32 |

| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நல்லூரான் திருவடி

- யோகர் சுவாமிகள் -

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி — கிளியே
இரவு பகல் காணேனெடி !

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி — கிளியே
நல்லூரான் தஞ்சமெடி !

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி — கிளியே
கவலை யெல்லாம் போகுமெடி!

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடெடி!

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி — கிளியே
ஆறுமுகம் தஞ்சமெடி !

சுவாமி யோக நாதன்
சொன்ன திருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னானெடி — கிளியே
பொல்லாங்கு தீருமெடி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைநகர்த் திருப்புகழ்

## (அருணகிரிநாதர்)

தாத்தா தான தத்தன தனதன
தாத்தா தான தத்தன தனதன
தாத்தா தான தத்தன தனதன தனதான

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்

போற்றாய் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு பிரமையது
பூட்டா மாயங் கற்றமை லிழியினா அமுதூறல்

வாய்த்தார் பேதஞ் செப்புபொய் விரகியர்
நோற்றே நூலின் சிற்றிடை யிடைபட
வாட்டாய் வீசுங் கர்ப்புர மிருகமதம் அகிலாரும்

மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேப்பூ ணாகங் கெட்டன னுனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ

ஆத்தாள் மால்தங் கைச்சிக னிகையுமை
கூத்தா பானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ்சுற்றிய பயிரவி புவனேசை

ஆக்கா யாவும் பற்றியெ திரிபுற
நோக்கா ஏதுஞ் செற்றவன் திருவிளை
யாட்டா லீசன் பக்கம துறையவன் பெறுசேயே

ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயுஞ் சொற்றமி ழருள்தரு முருகோனே

ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்பரபை நெடுமதின்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனுக்கு நல்லதோர் அர்ச்சனை

அப்புனத்திற் சண்முகனார் அண்ணா எனவழைக்க
ஒப்புடனே சென்றங் குருக்காட்டித் - துப்புறழ்வாய்
வள்ளிமணம் பூணவைத்த வாரணனே நாயடியேன்
உள்ளமிசை நின்றான் உதவு.

1 . ஆனைமுகற் கிளையவனே போற்றி போற்றி
அம்பலவா ணன்மகனே போற்றி போற்றி
வானவர்கள் அறியாத மணியே போற்றி
மருவுமடி யார்க் குதவும் மருந்தே போற்றி
தேனமுதத் தமிழ் தந்த செல்வா போற்றி
தெய்வகுஞ் சரிவள்ளி கணவா போற்றி
ஞானமறை தந்தருளும் நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

2 . சீரான படையாறில் திகழ்வாய் போற்றி
சிவகுருவாய் உபதேசம் செய்தாய் போற்றி
பேரான சிவசோதிப் பிழம்பே போற்றி
பேணுபுவி யத்தனைக்கும் பெரியோய் போற்றி
கூரான வேல்பிடித்த குமரா போற்றி
கொக்கரிக்கும் செஞ்சேவற் கொடியாய் போற்றி
நாரா யணன்மகிழும் மருகா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

3 . பலகலையின் வடிவான பரமா போற்றி
பழநிமலை வீற்றிருக்கும் பாலா போற்றி
கலசமுனிக் கருள்சுரந்த கனியே போற்றி
கற்கிமுகி தனைமடித்த களிறே போற்றி
திலகநுதற் பார்வதியாள் சேயே போற்றி
தேம்பியநக் கீரன்நோய் தீர்த்தாய் போற்றி
நலமான நமசிவாயப் பொருளே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 . பரவுமடி யார்சுவைக்கும் பழமே போற்றி
எண்ணாகி எழுத்தாகி நின்றாய் போற்றி
இருநிலநீர் தீவளவா னானாய் போற்றி
கண்ணுதலான் தந்தமுதற் கடவுள் போற்றி
கானமயில் ஏறிவரும் கதிரே போற்றி
நண்ணுகிற பரயோக நடனா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

5 . தீதுமலி சூரர் குலம் செறுத்தாய் போற்றி
தினைப்புனத்தில் மான்தேடிச் சென்றாய் போற்றி
சீதமிகு தேன்தினைமா தின்றாய் போற்றி
திகழ்வேங்கை மரமான செல்வா போற்றி
ஓதுபெயர் முட்டையென உரைத்தாய் போற்றி
ஓம்பொருளைக் கேட்டவனை உதைத்தாய் போற்றி
நாதமொடு விந்தான நலமே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

6. தீயவினை தீர்த்தருளும் தந்தாய் போற்றி
திரைநரைமூ தாட்டிகவி கேட்டாய் போற்றி
தூயபரம் பொருளான சுடரே போற்றி
தொன்றுமுடி வில்லாத சோதீ போற்றி
நேயமுணர் நெஞ்சினிக்கும் விமலா போற்றி
நீலமயி லேறிவரும் நீபா போற்றி
நாயகமாய் நலமருளும் நலமே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

7. பவவினையைப் பற்றறுக்கும் பதியே போற்றி
பக்தியெனும் வலையிலகப் படுவாய் போற்றி
கவலையெலாந் தீர்த்தருளும் கந்தா போற்றி
கார்த்திகையார் பாலூட்டும் சிறுவா போற்றி
தவமுடையோர் கண்டுவக்கும் தருவே போற்றி
தலையெழுத்தை அழித்தெழுதும் தலைவா போற்றி
நலமான தேரேறும் நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வேதமுடன் ஆகமமும் விரித்தாய் போற்றி
வேடுவனாய் வடிவெடுத்த வேலா போற்றி
போதமொடு வீடருளும் புனிதா போற்றி
பொன்னாடர் அறியாத பொருளே போற்றி
ஆதரவு தந்தருளும் அழகா போற்றி
அருணகிரி தமிழ்கேட்கும் அதிபா போற்றி
நாதஉப தேசகுரு நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

9. செந்தா மரைத்தேவி மருகா போற்றி
சீரான திருஅருளும் செல்வா போற்றி
அந்தாதி யில்லாத அப்பா போற்றி
அருவொடுரு அருவுருவு மானாய் போற்றி
சிந்தாகுலந் தீர்க்கும் தேனே போற்றி
தேவர்தமைச் சிறைமீட்ட தேவா போற்றி
நந்தூரும் செந்தூரில் நாதா போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

10. பூவாகக் கமழ்கின்ற பூவே போற்றி
புவியாக ஒளிர்கின்ற புவியே போற்றி
காவாகப் பயனுதவுங் காவே போற்றி
கதிராகச் செழுமைதரும் கதிரே போற்றி
ஆவாகப் பால்பொழியும் ஆவே போற்றி
அரனாகக் கதிகாட்டும் அரனே போற்றி
நாவாகப் பாடுகின்ற நாவே போற்றி
நல்லூரிற் கந்தப்பா போற்றி போற்றி

- அளவையூர் சஞ்சீவி -

# பொங்கும் பால்

உங்கள் வீட்டிலும் இன்றைக்கு கிருஷ்ணன் வந்து விட்டானா என்று கோபிகை ஆவலுடன் தன் தோழியைக் கேட்டாள். காரணம் அவள் வீட்டிலும் பால் பொங்கி வழிந்தது தான். அதற்கு ஏன் கிருஷ்ணன் வந்து விட்டானா என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

அடுப்பில் வைக்கப்பட்ட பால் சூடேறி எட்டி எட்டிப் பார்க்கிறது எதற்கு? மிகப் பரந்த பாற் கடலில் பள்ளி கொண்டிருக்கிறாயே பரந்தாமா இந்தப் பாத்திரத்தினுள் உழலும் என்னைப் பார்க்க வரமாட்டாயா என்றும் ஏங்குகிறது எட்டி எட்டிப் பார்த்து பாத்திரத்துக்கு வெளியே பொங்கி வழிந்து தேடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை விழா

காலம் :- 02.08.2006 காலை 8 மணிக்கு

இடம் :- ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டபம்

தலைவர் :- த. பிரதீஸ்வரன்
(இந்துசமய அபிவிருத்தி உதவியாளர்)

பஞ்சபுராணம் :- ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள்.

சிறப்பு விருந்தினர் :- செல்வி. மஞ்சுளாதேவி

சிறப்பு சொற்பொழிவு :- இரா. சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)
கந்த சத்தியதாசன்,
சி. சசீவன்

ஆசியுரை :- சிவஸ்ரீ நாகேஸ்வரக்குருக்கள்
(சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில்)

வாழ்த்துரை :- க. நாகராசா (மாவட்ட இணைப்பாளர்)
நா. முருகையா (ஆத்மஜோதி மண்டபம்)

வரவேற்புரை :- செல்வி. மகிந்தினி (இந்துசமய அ.உதவியாளர்,
இந்து கலாசார அமைச்சு)

நன்றியுரை :- சுப்பிரமணியம்
அதிபர் (ஏழாலை சைவமகாஜன வித்தியாசாலை)

கலை நிகழ்ச்சிகள் :- அறநெறிப் பாடசாலை மாணவர்கள்

ஊர்வலம் ஏழாலை ஏழுகோயில் பிள்ளையார் கோயிலில் இருந்து புறப்பட்டுத் தபாற்கந்தோர் சந்தி வழியாக புறப்பட்டு மண்டபத்தை அடைந்து காலை 9 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

த. பிரதீஸ்வரன்
இந்துகலாசார
அபிவிருத்தி உதவியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி அலர்ந்ததென் றுந்தீபற

சத்தியம் சிவம் சுந்தரம் எல்லாம்
சகலருக்கும் பொது வென் றுந்தீபற
சங்கடம் தீர்ந்ததென்றுந்தீபற
நித்தியம் நினைவுக ளெலாம் எங்கள்
ஆத்ம ஜோதீயென் றுந்தீபற
அனைவரும் சம மென் றுந்தீபற
நேற்றும் இன்றும் நாளையும் என்றும்
நேர்மையும் கடமையுமென் றுந்தீபற
நென்னலும் நாளையுமென் றுந்தீபற
முத்தான தொண்டரும் முதலான ஜோதியும்
முகிழ்த்தது கனடா வென் றுந் தீபற
மும்மல காரீயம் முனிவோ மென்றுந்தீபற
பத்தான தொண்டர்கள் பரப்பிடும் இந்துசமய
பேரவை எழுந்ததென்றே யுந்தீபற
பண்பான ஆத்மஜோதியென் றுந்தீபற
நித்திய ஜோதியாய் வாழ்ந்திடும் ஆத்மா
நிர்த்தனம் புரிந்ததென்றுந் தீபற
நேர்த்தியிலும் நேர்த்தியென் றுந்தீபற
காண்பானும் காட்சியும் காண்பொருளும்
கட்டோடே விட்டியென் றுந்தீபற
கடவுளொன்றே நிசமென்றுந் தீபற
வீணான ஆசைகள் போமென் றுந்தீபற
வேணு கோபாலன் விளம்பிடும் ஓசைகள்
வெற்றிக்கு வழி யென் றுந் தீபற
பரவுவார் பாவம் மறைத்திடப் பணிக்கும்
பரமனைப் பணிவோமென் றுந்தீபற
பாரெங்கும் அமைதியென் றுந்தீபற
அகிலமும் சாந்தி பிறந்திட வேணு மென்றே
அனைவரும் வேண்டிட உந்தீபற
ஆத்மஜோதி அலர்ந்த தென் றுந்தீபற
கவிதை மழை பொழியும் கந்தவனம்
தலைமை ஆசிரிய ரென்றுந் தீபற
தரணி யெங்கும் சைவம் சிறக்க உந்தீபற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக வள்ளல், ஞானசுரபி
# ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள்

சு.வி.மகாலிங்கம்
(வித்துவான், சைவப்புலவர்)

ஆத்மஜோதி அவர்கள் "தமிழீழம்" எங்கும் நெஞ்சுறுதியுடன் மக்களைப் பாதயாத்திரையாகத் திருமுறைகளைப் பாடிப்பாடி எல்லாக் கிராமங்களுக்கும் கோயில்களுக்கும் அழைத்துச் சென்றவர். நாள் கோள் முதலியவற்றிற்கு அஞ்சாது ஆற்றல் அளிக்கும் சைவத் திருமுறைகளை நாளும் கோளும் சரியில்லாத காலகட்ட நிலையிலும் நலமே விளைய நம்பிக்கையூட்டியவர். விடத்தல்பளை சம்பாவெளிப் பிள்ளையார் கோயிலில் பேசிய சுருக்கமான குறிப்புகள் இக்கட்டுரையாளர் நெஞ்சத்தில் இன்னமும் பதிந்துள்ளன.

சிவபெருமான் அருளைப் பெறுவதற்கு ஆன்மா முதன்முதலாகத் தனது இயல்பையும், மக்களுக்கும் (தனக்கும்) ஆண்டவனுக்கும் உள்ள சம்பந்தத்தையும் அறிதல் வேண்டும். எம் திருமுறையாசிரியர்கள் (சிறப்பாக சமயகுரவர்கள்) பௌத்த சமண சமயகாலம் அவர்கள் அனுபவித்த துன்பங்களைச் சிவப்பரம் பொருளையே பாடியவாறு வெற்றி பெற்றார்கள். "உழவாரப்படை கையில் உடையான் வைத்தன தமிழ்" என்று போற்றியவர் எம்.நா.மு.ஐயா அவர் எண்ணம் மலரும்.

இறைவனே தமிழில் அடியவர் பாடுவதை விரும்பினார். அருந்தமிழில் எழுந்த மறையாகத் திருமுறைகள் எம்மவர் இல்லத்திலும் இறைவிளங்கும் திருக் கோயில்களிலும் ஓதப்பெற்று வந்துள்ளன. மனம் கட்டுப்பட்டு நல்வழிபெற ஆடிப்பாடிக் கூடிப் பிரார்த்திப்போம்.

இறைவனைப் பாடிப்பரவும் அடியார் உயிர்கள் இடத்து கலந்திருப்பினும், சிவன் ஆன்மாவாகான். ஆன்மா சிவனாகான். எவ்வாறெனில், சிவன் உயிராகவும் உயிரின் வேறாகவும் நிற்பான். ஆனால் ஆன்மா சிவனாயும் சிவனின் வேறாயும் நிற்கமாட்டாது. சிவனது இயல்பையும் உயிரினது இயல்பையும் வெவ்வேறாக அறிந்து நாம் இடரிலும் என்றும் பரவி அறிதல் வேண்டும். "பந்தமும் வீடும் படைப்போன் காண்க" (மாணிக்கவாசகம்) என்றவாறும் "உயிர் இல்லாதபோது உடலிற்கு இருப்பும் செயலும் இல்லை. ஆகவே உயிராயுள்ள சிவனே ஆதாரம். துன்பம் நிறைய வரும் போது பெறுதற்கரிய பரம்பொருளை "பக்தி நெறியால்" சிக்கெனப் பாடிப் பரவவேண்டும்" என்றவாறும் நோக்குக. ஆத்மஜோதி ஐயா அவர்கள் சிவப்பணியும் அடியார் பணியும் ஒருங்கே புரிந்த வள்ளல். தென்மராட்சி சாவகச்சேரியில் "யோகபவனத்தில்" இருந்த காலத்தில் பாதயாத்திரையாக சப்த-தீவுப்பகுதி முதல் யாழ்ப்பாண காரியாலயப் பகுதியும் பச்சிலைப்பள்ளி வரை தொண்டர்களுடன் பாடிப்பரவியவாறு திரிந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகள் தோறும் பிரார்த்தனை செய்தவர். தொடர்ந்து தென்மராட்சியில் இல்லப்பிரார்த்தனை செய்து வந்தவர். அத்தோடு திவ்யஜீவன சங்கத்தைத் தானே தலைமை தாங்கி, பல சைவ, சமூக சங்கங்களை ஒன்றுகூட்டி சற்சங்கம் நடத்தியவர். "கருமயோகி" ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் சகலரையும் வாராவாரம் வீட்டுப்பிரார்த்தனை செய்வித்தவர். வசதியீனம் குறைந்த பல பிள்ளைகளை பாடிப்பரவிப் போகும் தருணத்தில், விசாரித்து அவர்களை கைதடி சிறுவர் இல்லத்தில் அழைத்து வளர்த்தவர். சீவகாருணியபூஷணம் வன்னிப் பெருநிலப் பகுதிக்குப் பலதடவை சென்று பிரார்த்தனை வழிபாடு, உபன்னியாசம் செய்தவர். தமிழர் தெய்வ நம்பிக்கையுடையவர்கள் என்று போற்றியவர்.

உழைப்பிலும் தொண்டிலும் இறையுணர்விலும் அழுந்தியிருக்கும் அன்பர்கள் "தமிழர்" வினை வந்து நலியாது என்று திருமுறையாசிரியர்கள் அறுதியிட்டுப் பாடியுள்ளனர். நாம் ஈசனடியார்கள் பழவினைப் பயனை மெய்த்தொண்டர்கள் வென்று வீறுபெறுதல் முடியும் என்பதே எம் அருளாளர்களின் முடிந்த கருத்து. வாழ்க்கையில் நம்பிக்கையும், எடுக்கும் "தமிழ்" முயற்சிகளில் தளர்ச்சியில்லா ஊக்கமும், கொடுக்கும் வகையில் அருளாளர்கள் வழங்கிய திருவருட் செய்திகளை செல்லுமிடமெங்கும் பரப்பிய மகாவித்துவான். திருவருளினால் அன்னாரின் தொண்டர்கள் இங்கும் தமிழ் ஈழத்திலும் உள்ளனர். வினையினின்றும் விடுபடமுடியும் என்று பாடியதுடன் வாழ்ந்தும் காட்டினார்.

"திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே" மேலும் , வாழ்க்கையில் பயனடையக்கூடிய அரிய நூல்கள் ஆக்கிய பேரறிஞர். பெற்றோர் பொறுப்பு, தமிழ் மொழிப்பற்று , சமய வளர்ச்சி என்று எடுத்துப் போதித்தவர். அவரது சீடர்கள் பலர், ஒன்றுபட்டு அவரது குறிக்கோளை வளர்ப்போமாக!

## ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் குருபூசை

## 09.09.2006

- திருமுறை முற்றோதுதல்
- சைவசமயப் பாடத்தில் சித்தியெய்திய மாணவர்களுக்குப் பரிசு வழங்கல்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலராலும் போற்றப்படும் உத்தமர்
# ஆத்மஜோதி முத்தையா அவர்கள்

ஆத்மஜோதி முத்தையா மாஸ்ரரிடம் நாவலப்பிட்டி ஸ்ரீகதிரேசன் வித்தியாலயத்தில் ஆரம்பவகுப்பு கற்கும் மாணவராகும் வாய்ப்புக் கிடைத்தமையே எனக்குப் பெரும் பேறாகும்.

பின்னர் உப அதிபர், அதிபர் என்று உழைப்பால் உயர்ந்தவர் ஆத்மஜோதி அவர்கள். மலையக மக்களுக்கு தமிழும், சைவமும் கற்பித்தது மட்டுமல்லாமல் ஆலயங்கள் தோறும் சமயச் சொற்பொழிவுகளையும் நடத்தி மக்களை நன்னெறியில் வாழ வழிகாட்டியாகவும் இருந்தவர்.

பலராலும் போற்றப்படும் உத்தமர், ஆனால் ஆத்மஜோதி ஐயா அவர்கள் பட்டம், பதவிகளை விரும்பாதவர். மிகவும் எளிமையாகவே வாழ்ந்து காட்டியவர். கதர் உடையுடனும் உத்தரிய மடிப்புச் சால்வையுடனும், கன்ன உச்சி, நெற்றியில் மூன்று குறி விபூதிப்பூச்சு, சந்தனப் பொட்டு,புன் சிரிப்பு - இப்படியே அவர் இறுதிவரை வாழ்ந்தவர்.

இவருடைய காலத்தில் மலையகப்பகுதி முழுவதும் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வந்தார்கள். மலையக மாணவர்களுக்கு தமது பணத்திலேயே பென்சில், கொப்பி, புத்தகங்கள் வாங்கிக் கொடுத்து கல்வி கற்பித்த வள்ளல் ஆவார்.

தென் இந்தியாவிலிருந்து பித்துக்குளி முருகதாஸ் பாடகர் குழுவினை இலங்கை முழுவதும் அழைத்துச் சென்று பஜனை பாடவைத்தவர். அச்சமயம் யாழ்ப்பாணம் வந்து எம்முடன் தங்கிநின்ற காலம் மறக்கமுடியாதது.

இவர் தமது இறுதிக்காலம் வரை ஆன்மீகத் தொண்டும் சமயப்பிரச்சாரமும் செய்ததுடன் அறநெறியில் வாழ்ந்து காட்டிய வள்ளலுமாவார். அவரின் நினைவாக ஆத்மஜோதி என்றும் சுடர் விட்டுப் பிரகாசிக்க எல்லாம்வல்ல இறைவன் நல்லருள் புரிவாராக.

சிவநேயர் : இ. தவகோபால் - ஜே. பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரின் பெருமை

(ஆசிரியர்)

நல்லூர் நல்ல ஊர். யாழ்ப்பாணத்து நல்லூர், தமிழ் நாட்டு திருவெண்ணெய் நல்லூர், ஆதித்த நல்லூர் போன்ற அரும் பெருஞ் சிறப்பு வாய்ந்த பழைய நகர். நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆரிய சக்கரவர்த்திகள் அகன்ற பெருநிலப் பரப்பை அரசு செய்தபோது தமிழ் நாட்டு இராமேஸ்வரத்தையும் பரிபாலித்து சேதுகாவலர் என்னும் சிறப்புப் பட்டமும் பெற்றிருந்தார்கள்.

தமிழ்த் தெய்வமாம் முருகனுக்குத் தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருகனுக்கும் தமிழருக்குமிடையில் உள்ள தொடர்பு வரலாற்றுக்கும் அப்பாற்பட்டதெனலாம். நமது நாடாகிய இலங்கையில் கருணைக்கடலாகிய முருகன் கதிர்காமத்திலும், நல்லூர், செல்வச் சந்நிதி, கந்தவனக் கடவை, மண்டூர், சித்தாண்டி, வெருகல், மாவிட்டபுரம் முதலிய புண்ணிய தலங்களிலும் கோயில் கொண்டிருக்கின்றான்.

செந்தமிழும் சைவ நெறியும் தலையெடுத்த நல்லூரின் பழைய அரசிருக்கைக்கு அருகிலமர்ந்த நல்லூர்க் கந்தனாலயத்தைச் சூழ நாற்றிசையிலும் காவற் கோயில்கள் அமைந்திருந்தன. கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயில், தெற்கில் கைலாசநாத சிவன் கோயில், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோயில், வடக்கில் சட்டநாத சிவன் கோயில் அமைந்திருந்தன. அரசர்கள் நந்திக் கொடியும் நந்தி முத்திரையும் கொண்டவர்களாய்ப் பரிபாலனம் செய்தனர்.

கல்வளை அந்தாதி பாடிய சின்னத்தம்பிப் புலவர், அவரது தந்தையாராகிய வில்லவராய முதலியார், ஆறுமுக நாவலர் போன்ற அறிஞர் பெருமக்களும் நல்லூரின் பெருமைக்குக் காரணராயிருந்தனர்.

இத்தகைய புகழ் பூத்த நல்லூரின் அருமை பெருமைகள் யாவற்றையும் பதினேழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் போர்த்துக்கேயர் என்னும் பறங்கியர் பாழ்படுத்தித் தரைமட்டமாக்கி விட்டனர். பின்னர் ஒல்லாந்தர் என்னும் உலாந்தாக்கள் அரசாட்சி செய்த காலத்தில் சைவ மறுமலர்ச்சி விடிவெள்ளிபோல் மெதுவாக ஒளி வீசியது. புலவர்கள் பலர் பக்திப் பிரபந்தங்கள் பாடுந் தகைமையுடையவர்களாய்த் தலை எடுத்தார்கள்.

பண்டைய நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை பறங்கியர் பாழ்படுத்தி, அத்திபாரத்தையும் கிளறிவிட்டபின் மறுமலர்ச்சிக் காலத்திலே 1734 ஆம் ஆண்டளவில் ஒல்லாந்தர் ஆட்சியின் போது, யாழ்ப்பாணக் கச்சேரியில் உயர்ந்த உத்தியோகம் வகித்த ஸ்ரீமத் இரகுநாத மாப்பாண முதலியார் என்னும் பெரியார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிகளிடம் உத்தரவு பெற்று ஒரு வேற்கோட்டம் அமைத்து, வேல்வைத்து வழிபடுவதற்கான முறையை ஆரம்பித்தார். மக்கள் வழிபட்டுய்யும் வகையில் சிவத்திரு சுப்பையாக் குருக்கள் என்னும் செம்மனச் செல்வர் பரார்த்த பூசையை முட்டின்றிச் செய்து வந்தார். நல்லூருக்குக் கிழக்கில் இருந்த மடத்தில் சிவத்திரு கங்காதரக் குருக்கள் கந்தபுராண படனஞ் செய்து பக்தி நெறியைத் தூய்மைப் படுத்தி வந்தார்.

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முன்னோடியாகவும் முதல்வராகவும் திகழ்ந்த முத்தியானந்தர் என்ற பெயரையுடைய கடையிற் சுவாமிகளுடைய நடமாட்டம் ஏற்பட்ட பின் நல்லூரில் ஒரு தெய்வீக அலை வீசத் தொடங்கியது. நாள் தோறும் வளர்ந்து வந்த நல்லூரின் சிறப்பு, வனப்பு புகழ் பெற்றனவாயின. கிழக்குப் புறத்தில் அமைந்த தேரடிக்குத் தனிச்சிறப்பு உண்டாகியது. அங்கே காவல் தெய்வமாய் வைரவக் கடவுளின் ஆனந்த கோலாகல அருள் வீச்சும், அதனால் கவரப் பெற்ற அடியார் கூட்டமும் கருங்கல் மனத்தையும் கரையப்பண்ணின. கற்பூர வரிசையும் காவடிகள் வரிசையும், கந்தன் மீது பக்திப் பாடல்கள் வரிசையும் தேரடியைத் தெய்வலோகம் ஆக்கின.

"ஒரு பொல்லாப்பு மில்லை.
நாமறியோம், ஆரறிவார்?
எப்பவோ முடிந்த காரியம்.
முழுதும் உண்மை."

என்ற மகா வாக்கியங்களை யோகர் சுவாமிகளுக்கு உபதேசம் செய்து ஆட்கொண்ட செல்லப்பா சுவாமிகள் தேரடியில் இருக்கத் தொடங்கிய பின் அந்த இடத்தில் ஓர் ஆத்மீக அலை வீசத் தொடங்கியது.

செல்லப்பர் தேரடியிற் குந்தியிருந்து சிந்திக்கத் தொடங்கிய காலத்திலேயே அடியார்கள் பலர் அவரிடம் ஏதோ அற்புத சக்தி உண்டென்று அனுமானித்து, அவரைச் சூழ்ந்து மொய்க்கத் தொடங்கினார்கள். அதேவேளையில் அவர் தமக்குள்ளே சிந்தனைப் பேச்சுக்களை முணுமுணுக்கக் கண்ட சிறுவர்கள், "விசரன்" என்று கூறிக் கல் எறியவுந் தொடங்கினர்.

பகல் முழுவதும் விசர்க்கோலம் கொண்டிருக்கும் செல்லப்பா சுவாமிகள், இரவில் அர்த்த சாமப் பூசை நிறைவுற்று எல்லோரும் அகன்ற பின் மெதுவாக இருக்கை விட்டெழுந்து கோபுர வாசற் பக்கம் சென்று முருகனைத் தேடுவார் போல் "பிதாவே! பிதாவே!!" என்று கூவி அழைத்து, அவருடன் சொல்லெதிர் பெற்றும் பெறாமலும் உரையாடி வந்தார்.

அவரின் உள்ளத்தில் முத்துப் போன்ற சிந்தனை வாக்கியங்கள் உருண்டு திரண்டு வெளிவரக் காத்திருந்தன. பக்குவமுள்ள சீடன் ஒருவன் வருவான் அவன் காதில் இந்த மகா வாக்கியங்களை வார்த்து விடலாம், அவன் மூலம் இவ்வாக்கியங்கள் சுருதியென எல்லோருக்கும் கேட்கும், எங்கும் கேட்கும் எனக் கருதினார். அம்மகா வாக்கியங்களை முன்பு பார்த்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பர் நல்லூர்த் தேரடியில் வாழ்ந்தவர். தவத்திரு யோகர்சுவாமிகள் நல்லூரிலேயே அரிய தவங்கிடந்து ஞானதீட்சை பெற்றவர். அவர் அருளிச் செய்த நற்சிந்தனைப் பாடல்களில் எல்லாம் நல்லூர்க் கந்தனின் கடாட்சம் தொனிக்கிறது. உலகம் உய்ய உதித்த இந்த ஞான பரம்பரையினர் மூலம் நல்லூர்க் கந்தன் அருள் மழை பொழிந்து வருகின்றான்.

ஒரு காலத்தில் நல்லூர்க் கோயில் நிர்வாகம் இப்போதிருப்பது போல் சிறப்பாயில்லாதபோது, "செல்லப்பா சுவாமிகள் தெய்வ வாக்காக ஒரு வெள்ளைக் காரன் வருவான். அதன் பின்னர் கோயில் கருமங்கள் செவ்வனே நடைபெறும் என்று சொன்னார் என அவருடைய சீடர்களுள் ஒருவரான கொழும்புத்துறை விதானையார் காலஞ்சென்ற திரு. திருஞானசம்பந்தர் வாயிலாகக் கேட்டிருக்கிறோம்.

நல்லூர் மேலை வீதியில் நல்லூருக்கு மேலும் பெருமை தேடிக் கொடுத்துக் கொண்டிருப்பது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் என்றால் அது மிகைப்படுத்திக் கூறுவது ஒன்றல்ல. இந்தியாவிலுள்ள ஆதீனங்கள் எல்லாமே பல பெரிய கோயில்களைப் பரிபாலனம் செய்யும் பாக்கியத்தைப் பெற்றுள்ளன. அதே போன்று கந்தப்பெருமான் திருவருளால் இந்த நல்லை ஆதீனமும் வளர்ந்து இலங்கை முழுவதற்குமே சைவத் தலைமைப்பீடமாக அமைந்து, பணியாற்ற வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

# பசி தீர்ந்தது

**ஒருமுறை துர்வாசமுனிவர் துரியோதனனைக் காண அஸ்தினாபுரம் வந்தார். அவரை அன்புடன் உபசரித்தான் துரியோதனன். இதனால் மனம் மகிழ்ந்த துர்வாசர் "துரியோதனா ஏதேனும் வரம் கேள்" என்றார். "என்னைத் தேடி வந்து தாங்கள் கௌரவித்ததைப் போல கானகத்தில் வாழும் பாண்டவர்களையும் தாங்கள் சந்திக்க வேண்டும்" என்றான் துரியோதனன். காட்டில் வறுமையில் வாழும் பாண்டவர்கள் துர்வாசரை உபசரிக்க முடியாமல் சிரமப்பட்டு அவரது சாபத்தைப் பெறுவார்கள் என்பது அவனது எண்ணம். துர்வாசர் பாண்டவர்களைச் சந்தித்தார். நீராடி விட்டு உணவருந்த வருகின்றேன்" என்று அவர் கூறிச்சென்றார். முனிவருக்கு எப்படி உணவிடுவது என பாண்டவர்கள் வருந்தினர். அப்போது கிருஸ்ணர் அவ்விடம் வந்தார். விவரம் புரிந்து கொண்டார். பாண்டவர்கள் சாப்பிட்ட பாத்திரத்தில் ஒட்டியிருந்த ஒரு பருக்கையை எடுத்துச் சாப்பிட்டார். அதேசமயம் பசியோடு குளித்துவிட்டுத் திரும்பிய துர்வாசரின் வயிறும் நிரம்பியது. பசியும் தீர்ந்தது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

ஒருவன் தியானம் பழக ஆரம்பிக்கும் முன் சரியானபடி பிரார்த்தனை பண்ணத் தெரிந்தவனாகவும்-

பூஜை ஆராதனை வழிபாடு ஆகியவை செய்பவனாகவும் -

இருக்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது அவனுக்குத் தேவை நீடித்த பொறுமை, பொறுமைதான்!

இவ்வாறு தொடர்ந்து ஒன்றிரண்டு ஆண்டுகள் கடைப்பிடித்து வந்தால், வெகுவிரைவிலேயே அவனுக்குத் தியான வாழ்க்கை சித்திக்கும்.

வெகுவிரைவிலேயே அவன் தியானத்திலேயே உயர் நிலையை அடைவான்.

## ஆரம்ப நிலைத் தியானம்

ஆரம்ப நிலைத் தியானம் எனப்படுவது, தியானத்தைச் செய்தே தீருவது என்ற உள்ள நெறி, அதில் மிகுந்த அக்கறை கொண்டவர்களிடம் சென்று, முதலில் பூஜையையும், பிரார்த்தனையையும் செய்து வருக-

இப்படிச் செய்து வந்தால் தியானம் தன் வழியே உன்னிடம் வந்து சரணடையும் என்று கூறுவது சுத்தமான அறியாமை-

## எல்லோருக்கும் வருமா?

அது மட்டுமன்று அவ்வாறாகச் சொல்லுபவர்களைப் பார்த்துப் போய்யா, போய்யா, நீயும் உன் தியானமும் என்று உதறி எறிந்து விட்டுப் போய் விடுவார்கள்.

ஏனென்றால் இன்றைய காலச் சூழ்நிலை அப்படி. அறிவியல் வளர்ச்சித் துறை அப்படி.

எதற்கெடுத்தாலும் அவசரம், பரபரப்பு, நேரமின்மை. இவ்வாறான நபர்களுக்குப் பூஜையோ, பிரார்த்தனையோ செய்யப் பொறுமை இருக்காது.

இவ்வாறான நபர்கள், தியானத்துடன் சேர்த்துப் பூஜையையும் பிரார்த்தனை யையும் செய்து வரலாம்.

## தியானம் செய்யும் உதவிகள்

ஒருவன் தியானத்தின் போது முழு வெற்றி பெறுகிறானா, அரை குறை வெற்றி பெறுகிறானா என்று முதல் கட்டமாக ஆராயத் தேவை இல்லை.

தியானத்தை அவன் எப்படிச் செய்த போதிலும், தியானமானது அவனுக்குப் பல புதிய கதவுகளைத் திறந்து வைக்கிறது.

தியானம் முதல் கட்டமாக அவன் ஆழ் மனதைப் பற்றி அறிந்து கொள்ளப் பேருதவி செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித முன்னேற்பாடுகளும் இன்றித் தியானம் செய்பவரின் மனத்திலே-

இவ்வகைப்பட்ட தியானம் மாபெரும் குருக்ஷேத்திரத்தைத் தினந்தோறும் நடத்திக் கொண்டே இருக்கும்.

இந்தமனச் சலனம் மிக்க போராட்டமானது எவ்வளவு நேரம் வேண்டு மானாலும் நேரத்தை எடுத்துக்கொள்ளக் கூடும்.

ஐயோ இவ்வளவு நேரமாகி விட்டதே என்று எவரும் வருந்தத் தேவை யில்லை.

அவ்வளவு நேரமாக வீணான நேரத்தினை எப்படி வீணாக்க முடிந்தது என்று நம்மால் உணரமுடியும்.

நாம் அவ்வாறான மனத்தைக் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

குறிப்பாக மனித மனத்தின் போராட்டங்கள், மனத்திலே எழக்கூடிய நுண்ணிய ஆசைகள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், கனவுகள், கற்பனைகள், வக்கிரம் பொருந்திய நினைவுகள் ஆகியவை அத்தனையும் தியானத்தின் போது, வீணாக்கப்பட்ட நேரத்திலே நிதர்சனமாகத் தெரிகிறது.

## நல்லவற்றையும் - தீயவற்றையும் உணர்த்தும் தியானம்

ஒருவர் ஒரு நாளைக்கு இரண்டு முறை, தியானம் பழக வேண்டும் என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த நியதிப்படி ஒருவர் மாலையில் தியானம் செய்ய அமரும் போது-

தியானத்தின் முன் ஒருவர் செய்யவேண்டிய முக்கிய கடமை ஒன்று உள்ளது.

அதாவது-

காலையில் எழுந்ததிலிருந்து மாலையில் தியானத்திற்கு வந்து அமரும் வரையில் அவன், தான் என்னென்னவற்றையெல்லாம் செய்தோம் என்று முதலில் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அந்த நிகழ்ச்சிகளின் கண்ணோட்டத்தை மனத்திரையில் பார்க்கும் போது-

இவற்றில் நல்ல செயல்கள் எவை?

தீய செயல்கள் எவை?

என்பன குறித்துத் தனித் தனியே பிரித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்யும் போது, முதல் நாள் மாலை வரை, அதாவது தியானத்தில் அமரும் வேளை வரை தான் என்னென்ன செய்திருக்கிறோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மன நிலைப்படி இன்று கெடுதலான செயல்கள் அதிகம் செய்துள்ளோமா?

நேற்று அதிகம் செய்துள்ளோமா?

இன்று நல்ல செயல்கள் அதிகம் செய்துள்ளோமா?

நேற்று அதிகம் செய்துள்ளோமா?

என்பனவற்றைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இதன் மூலம் நம்முடைய செயல்களை நாமே தீர விசாரிக்கும் பட்சத்தில் பாதகமில்லாத நீதிபதியைப் போல் ஆகிவிடுவோம்.

## உள் திரும்பும் மனம்

இவ்வாறு செய்ததன் பின்னால், நம்முடைய துள்ளும் வெளிமனமும், அதன் நினைவு ஓட்டங்களும் உள்ளே திரும்பி வரத் தலைப்படுகின்றன.

தியானத்தின் மூலமாக, மிக எளிதான முறையில் மனம் உள்நோக்கித் திரும்புகிறது.

இதற்கு ஆரம்பகாலத் தியானம் பெரிதும் ஒத்துழைப்பை நல்குகிறது.

இவ்வாறெல்லாம் தியானத்தின் போது நிகரற்றது என்பது உடனடியாக நமக்கு விளங்காமல் கூடப் போகலாம். ஆனால் நிச்சயமாகத் தியானத்தின் போது, மனம் உள் முகமாக அடங்கிப் போகிறது என்பதைக் காலம் விரைவில் உணர்த்தி விடும்.

## தொடர்ந்து பயிற்சி பெறுங்கள்.

மனம் என்பது அலையும் தன்மை வாய்ந்த ஒன்றுதான்-

எனவே அலையும் மனத்தினைக் கட்டுப்படுத்த ஒரு குறிப்பிட்ட நேரத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட ஆசனத்தில் உட்கார்ந்து பழகுவது முதலில் இரண்டு விதமான நன்மைகளைத் தருகின்றன.

1. உடலுக்கு நன்மையைத் தருகின்றன.
2. நரம்பு மண்டலத்தை வலுப்படுத்துகின்றது.

தொடர்ந்த பயிற்சியினால், முதலில் மனமானது ஒருமைப்படுகிறது.

அதாவது குவிக்கப்படுகிறது. இந்தக் குவிப்பு சக்தி பின்னாளில் தியானத்திற்கு அடிக்கல்லாக விளங்குகிறது.

## தியானத்தின் நன்மைகள்

தியானத்தினால் பின்வரும் நன்மைகளைக் கூறலாம்.

1. தியானமானது ஒழுங்கின்றிச் சிதறிக் கிடக்கின்ற வாழ்க்கையை ஒருங்கிணைக் கின்றது.
2. தியானம் செய்கிறோம் என்று அமர்ந்து விட்டு அந்தத் தியானமானது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை வெற்றியடையாமல் போனாலும் அந்தத் தோல்வியினைத் தோல்வி என்று எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

தியானத்தின் போது மனமும், புத்தியும், உணர்ச்சிகளும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து உலவிக் கொண்டு இருப்பதால், வாழ்க்கையானது ஒரே சமச்சீராக இயங்குகின்றது.

3. எந்த அளவுக்குத் தியானப் பயிற்சியின் போது முதிர்ச்சி ஏற்படுகின்றதோ - அந்தளவுக்கு ஆன்மிக அனுபவங்களும் வந்து இவர்களுக்குப் பெரும் உதவிகளைச் செய்வதாக அமைகின்றது.

## உண்மையான தியானம் என்பது என்ன?

உண்மையான தியானம் என்பது என்னதான் என்று உங்களுக்குச் சந்தேகம் எழலாம்.

உண்மையான தியானம் எனப்படுவது நம்முடைய இதயக் கோயிலுடைய கதவுகளைப் பரிபூரணமான நம்பிக்கையை மனதில் நிரப்பிக் கொண்டு — நம்பிக்கையுடன் தட்டுவதாகும்.

இத்தகைய தட்டல், தேடல் எல்லாமே மிக விரைவாகவே மனத்தின் கதவுகளைத் திறப்பதுடன், தியானத்தில் பூர்ண சித்தியையும் ஏற்படுத்துகின்றது.

## தியானம் என்பது என்ன?

தியானத்தைப் பற்றி எவராலும் விவரித்துச் சொல்ல முடியாது. அது புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று.

எனவே இடத்திற்கு ஏற்ப, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, நேரத்திற்கு ஏற்ப ஒரே தியானம் பல்வேறு பொருளைச் சுட்டிக் காட்டுவதாக அமையும்.

ஆனால், இலக்கு என்று பார்த்தீர்களேயானால், அது ஒன்றிலேதான் அமைந்திருக்கும்.

அதாவது நதிகள் வேறுவேறு பெயர்களைக் கொண்டு விளங்கி வந்தாலும் - அவை இறுதியாக முடிவடையும் இடம் கடல்தான், இதைப் போன்றதுதான் தியானமும்.

தியானம் என்று கூறப்படுவது நம்முடைய மனத்தை அதன் மேலேயே திருப்புவது என்பதாகும்.

மனமானது தன்னிலிருந்து கிளம்பி வரக்கூடிய எல்லாவிதமான எண்ண அலைகளையும் நிறுத்தும்போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி உலகத்திலிருந்து வரக்கூடிய புறத்தூண்டுதல்கள், நம்முடைய மனத்தின் மேலே எக்காரணத்தைக் கொண்டும் ஆதிக்கம் செலுத்த முடியாது. அதிகாரம் செய்ய முடியாது.

## மன ஆற்றலைப் பெருக்கக்கூடிய தியானம்

ஒவ்வொருவரும் தியானத்தைச் செய்து வரும் போது.

மனத்தின் சக்தியானது சிறிது சிறிதாகப் பெருகிக் கொண்டே வருகிறது.

இந்தத் தியானப் பயிற்சியை மிகக் கடுமையாக்கிக் கொண்டோமானால் தியானமானது மிகவும் எளிமையான ஒன்றாக மாறிவிடுகிறது.

தியானம் எளிமையாக ஆக ஆக தியானம் புரிபவர்கள் தங்களுடைய புற உலகையும் மறந்துவிடுகின்றனர்.

தங்கள் உடலைக்கூட இவர்கள் மறந்து விடுகின்றனர். இதனால், மன ஆற்றலுடன் மிக மிகச் சாந்தியான ஓய்வும் இவர்கள் பெறுகின்றனர்.

## ஒருமணி நேரத் தியானம்

ஒருவர் தினமும் ஒரு மணி நேரம் தியானம் செய்தாலே போதும்.

வாழ்க்கையில் நம்மைச் சூழ்ந்திருக்கும் பல்வேறு இன்னல்கள், பிரச்சினைகள், கவலைகள் ஆகியவை எல்லாம் மீதியுள்ள இருபத்து மூன்று மணிநேரத்தில் பொடிப் பொடியாகிப் போகும்

ஒருமணி நேரத் தியானம் என்பது பரிபூர்ணமான ஓய்வின் சாந்தியின் அடையாளம்; ஓய்வைத் தருவது தியானம்.

ஆழ்ந்து செய்யப்படும் தியானமானது உடலுக்கு மட்டும் ஓய்வைக் கொடுப்பதுடன் நிற்காமல்-

உள்ளத்துக்கும் ஓய்வு தரும் ஒன்றாக விளங்குகின்றது. பரிபூர்ண சாந்தி ஒருவனுடைய மனத்தில் நிலவ வேண்டும் என்றால் நிம்மதியான ஓய்வு எப்போதும் ஒருவனிடம் குடிகொண்டிருக்க வேண்டுமானால் அவனுக்குத் தேவையானது தியானம்.

இவ்வகைப்பட்ட ஓவ்வினை, ஆழ்ந்து உறங்கும் உறக்கம் கூடத் தருவது இல்லை.

## தியானத்துக்கும் உறக்கத்துக்கும் உள்ள வேறுபாடுகள்

தியானம் செய்யும்போது, நம்முடைய மனமும் மூளையும் நல்ல முறையில் ஓய்வை எடுப்பதாக உள்ளது.

ஆனால், உறக்கத்தின் போதோ மனம் கொதிப்படைகிறது. அடுக்கடுக்கான எண்ண அலைகள் மூளையைத் தாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் கனவுகள், கற்பனைகள் போன்றவை ஏற்படுகின்றன.

ஆழ்ந்த நித்திரையில் உள்ள ஒருவனின் மூளை சூடேறிக்கொண்டே உள்ளது.

ஆழ்ந்த தியானத்தில் உள்ள ஒருவனின் மூளை குளிர்ச்சியடைந்து, சலனமற்று, ஓய்வு மனோபாவனையுடன் விளங்குகின்றது.

இதைத் தியானம் செய்யும் எவரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது ஒரு மனிதர் உங்களைத் தொட்டு எழுப்பினால்-

அல்லது அழைத்தால்-

ஒன்றிரண்டு விநாடிகளில் தூக்கம் கலைந்து எழுந்துவிட முடிகிறது.

முறையான தியானத்தில் புற உணர்வுகள் மறக்கடிக்கப்படுகின்றன; அல்லது, நினைவை இழக்கின்றன.

இதனால் தியானம் செய்பவரின் உடலைப் பல நூறு துண்டுகளாகச் சிதறிவிழும்படி வெட்டிப் போட்டாலும் அது அவருக்குத் தெரிய நியாயமில்லை.

## தியானத்தினால் ஏற்படும் உணர்ச்சி

தியானத்தினால் உடல் இலேசாவதைப் போன்ற உணர்ச்சி உண்டாகிறது. நீங்கள் அறுபது கிலோ எடையுள்ள மனிதராக இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம்.

இந்த அறுபது கிலோ எடை உடலும் மெலிதாகக் கரைந்து இறுதியில் எடையற்ற உடலைப் பெற்றால் எப்படியோ.

அப்படியே இருப்பதைப் போன்ற உணர்ச்சி உண்டாகும்.

தியானத்தினால் கிடைக்கக்கூடிய மாபெரும் பயன்களில் இதுவும் ஒன்று.

நாம் பஞ்சுபோல எடை குறைந்து காற்றில் மிதக்க முடியுமானால், அந்த அனுபவமும் உள்ளக்கிளர்ச்சியும் எப்படி இருக்கும்?

எண்ணிப் பாருங்கள்-

தியானத்தினால் கிடைக்கக் கூடிய உண்மையான பலன் இதுதானா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சடைவரதர் தரிசனம்

அடியேனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும். ஒரு சாமியார் திடீரென ஒருநாள் வீட்டிற்கு வந்தார். தந்தையாரும் தாயாரும் வீழ்ந்து வணங்கினர். தாயார் அவருடைய பாதம் விளக்கத் தண்ணீருக்காக உள்ளே சென்றார்.

சாமியார் தாயாரை அழைத்தார். தண்ணீர் வேண்டாம் என்றார். "நான் இப்போதுதான் கிணற்றடியில் கழுவிவிட்டு வந்தேன்" என்றார். உண்மையில் நியாயம் அதுவல்ல. தாயார் நீர் எடுக்கச் சென்ற பானையில் தண்ணீர் இல்லை. கிணற்றடிக்குப் போக நினைத்தார் தாயார். சாமியார் அதற்கிடையில் அழைத்து விட்டார்.

தாயார் தந்தையார் இருவரும் விழுந்து கும்பிட்டபடியினால் அடியேனும் விழுந்து கும்பிட்டேன். அடியேனுடைய தலையைத் தடவினார். "நீ சட்டம்பியாராய் இருப்பாயடா" என்று கூறிவிட்டு, "உலகமும் சுற்றுவாயடா" என்றார். கடைசியில் "ஒரு குறையும் இல்லாது வாழ்வாய்" என்றார். சுவாமியார் அன்று சொன்னதை இன்று நினைத்துப் பார்க்கிறேன். எவ்வளவு பெரிய உண்மை நாற்பது ஆண்டுகள் ஆசிரியத் தொழிலில் இருந்தேன். இன்று இச்சரிதத்தைக் கனடாவில் இருந்து எழுதுகிறேன் என்றால் சடைவரதர் மகிமையை யாராலேதான் கூறமுடியும்?

இவர் அச்சுவேலியைச் சேர்ந்தவர். சலவைத் தொழிலாளர் இனத்தைச் சேர்ந்தவர். சரவணை என்னும் பெயருடையவர்: சரவணைச்சாமி என்றும் வண்ணாரச்சாமி என்றும் சாமானிய மக்கள் அழைப்பதைக் காதால் கேட்டுள்ளேன். ஒருவன் பிறந்த ஊரில் சந்நியாசியாகக் கூடாது என்று கூறுவார்கள். காரணம் பூர்வாச்சிரமப் பெயர்களைத்தான் மக்கள் அழைப்பர். மணிபாகவதர் அவர்கள் நல்லை ஆதீனம் அமைத்துச் சுவாமிநாத பரமாச்சாரியார் என்று உலகம் முழுவதும் ஒப்புக்கொண்ட பின்னும் அவர் பூத உடலை நீக்கும் வரையும் - அவரை மணிபாகவதர் என்றே அழைத்தனர். அவர் பூத உடலை நீத்துப் பல்லாண்டுகளாகி விட்டன. இப்பொழுதும் அவரைப் பற்றிப் பேச்சு வந்தால் மணிபாகவதர் என்றே அழைக்கின்றனர். மக்களுக்குப் பூர்வாச்சிரம நினைவே தவிர அவர் சாதனையில் எவ்வளவு உயர்ந்துள்ளார் என்றோ இல்லறத்தை விடுத்து வானப்பிரஸ்தமும் கடந்து சந்நியாசியாகிய பக்குவத்தை அடைந்துள்ளார் என்றோ புரிவதில்லை.

சடைவரதர் சரவணை என்ற பெயருடன் சிறுவனாக இருந்தபோது முத்தியானந்தர் எனப்படும் கடையிற் சுவாமிகள் இவரைக் கண்ணுற்றார். பல பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த சரவணை கடையிற் சுவாமிகளை நோக்கிச் சென்றார். உடனே சுவாமிகள் அவரை வாரியணைத்துத் தனது தலையில் இருந்த தொப்பியைக் கழற்றிச் சரவணையின் தலையிலே அணிந்து அழகு பார்த்ததோடு அவரைத் தூக்கிவைத்து ஆனந்தக் கூத்தும் ஆடினார். சரவணைக்குச் சிறுவயதிலேயே குரு அரவணைப்பும் குரு உபதேசமும் கிடைத்து விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் சடைவரதருக்குச் சீடர் ஆனார்கள். அந்தணரிற் சிலரும் சீடரானார்கள். ஏழாலையிலும் பல சைவசித்தாந்திகளே சுவாமிகளின் சீடராகி அவர் பின்னே திரிந்ததை நானறிவேன். ஏழாலை மேற்கிலுள்ள சுடலையிலேதான் சுவாமிகளைச் சமாதி வைத்தார்கள்.

சுவாமிகளுடைய ஆச்சிரமம் மிருசுவிலில் உள்ள உசன் என்ற இடத்தில் அமைந்திருந்தது. அங்கே மங்கையர்க்கரசி அம்மா, பூஜை அம்மா, மனோன்மணி அம்மா என்று அழைக்கப்பட்ட மூவர் சீடர்களாக இருந்தனர். மங்கையர்க்கரசி அம்மா யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகளின் உத்தம சிஷ்யையாக விளங்கிய பொன்னம்மா அம்மையாரின் இனத்தவர் ஆவார்.

பூஜையம்மா அவர்கள் சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கப் பரதேசியாரின் தங்கையாவார். மனோன்மணி அம்மா மட்டுவிலைச் சேர்ந்தவர்.

உசன் ஆச்சிரமத்தை நாடி அந்தக் காலத்தில் குரு பூஜைகளின் போது ஆயிரக்கணக்கில் அடியார்கள் கூடுவர். அங்கு கூடுவோர் எல்லாரும் பழுத்த சிவனடியார்கள். குடாநாட்டிலுள்ள சிவனடியார்கள் அத்தனை பேரையும் உசன் ஆச்சிரமத்திற் சந்திக்கலாம்.

ஏழாலையைச் சேர்ந்த பேரம்பல வைத்தியர் சுவாமிகளின் உத்தம சீடர்களில் ஒருவர். இவரது தமையனாராகிய அருளானந்த சிவம் அவர்களும் சுவாமிகளின் முதன்மைச் சீடர் ஆவர். ஒவ்வொரு குருபூஜையின் போதும் பேரம்பலம் அவர்கள் ஏழாலையில் இருந்து காய்கறி வகைகளும் வாழை இலையும் கொண்டுவருவார். அவ்வளவு பக்திசிரத்தையாகச் சீடர்கள் ஈடுபட்டனர். இந்த அடியார்கள் யாவரும் “கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலினராக” விளங்கியவர்கள். இந்த அடியார் கூட்டத்தை வற்றாப்பளை அம்மன் கோயிலிலும் கதிர்காமத்திலும் நல்லூரிலும் மாவிட்டபுரத்திலும் செல்லச்சந்நிதியிலும் வல்லிபுர கோயிலிலும் தவறாது சந்திக்கலாம்.

சடைவரதர் பரம்பரையில் வந்த இல்லற அடியார்கள் பலர் இன்றும் வாழ்கின்றனர். அந்த அடியார் பரம்பரையில் வந்த குடும்பங்கள் சீரும் சிறப்புமாக இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. கனடாவிலும் சில குடும்பங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது.

சுவாமிகள் அடியார் இல்லங்களுக்கு அடிக்கடி எழுந்தருளுவார். அவரோடு பல சீடர்களும் உடன் செல்வர். அன்று அங்கு மாகேஸ்வர பூஜையும் சத்சங்கமும் நடைபெறும். வீடுகள் தோறும் திருமுறைப் பாராயணமும் நடைபெறும்.

வைகாசி விசாகப் பொங்கலுக்கு வற்றாப்பளை அம்மன் கோயிலில் இந்த அடியார்கள் எல்லோரும் ஒன்று கூடுவர். வைகாசி விசாகத்தை அடுத்த ஒரு திங்கட்கிழமைதான் வற்றாப்பளையில் பொங்கல் நடைபெறுவதுண்டு. பொங்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்ததும் எல்லோரும் கதிர்காமத்தை நோக்கி பாதயாத்திரையை மேற்கொள்வர். பாதயாத்திரையின் போது கந்தபுராணம் படித்துப் பயன்கூறுவதும் பஜனை பாடுவதும் இடம்பெறுவது உண்டு.

அடியார்கள் எல்லோரும் குருவின் திருவடிக்குப் பூஜை செய்வார்கள். அப்பூஜை காலகதியில் திருவடிப் பூஜை என்றாயிற்று. நாம் எல்லோரும் இறைவன் திருவடியை நோக்கியே யாத்திரை செய்கின்றபடியினால் நாம் எல்லோருக்கும் சேர்த்து ஒரு பெயருண்டு. அதுதான் திருவடி யாத்திரைக்காரர் என்பது. கதிர்காம யாத்திரையை மேற்கொள்ளுவோர் கதிர்காம யாத்திரைக்காரர் என்றும் காசி யாத்திரையை மேற்கொள்வோர் காசி யாத்திரைக்காரர் என்றும் கைலாயம் செல்வோர் கைலாய யாத்திரைக்காரர் என்றும் சொல்லப்படுவதுபோல திருவடியை நோக்கி யாத்திரை செய்வோர் அத்தனை பேரும் திருவடி யாத்திரைக்காரரேதான்.

இதனை மேற்கொண்டே பெரிய மகான்களின் பாதுகைகளை வைத்துத் திருவடிப் பூஜை நடத்துகிறார்கள். சமீபத்தில் சாயி பக்தர்கள் சாயி பகவானுக்குத் தங்கத்தால் ஒரு திருவடி செய்து அதனை அவர் காலில் அணியச் செய்து அத்திருவடியைப் புட்டபர்த்தியில் உள்ள பிரசாந்தி நிலையத்தில் வைத்துப் பூஜை செய்கிறார்கள். மேற்கொண்டு வெள்ளியாலோ செம்பாலோ மரத்தாலோ பாதுகைகள் செய்து உலகம் முழுவதிலும் உள்ள சாயி சமித்திகளுக்கு அனுப்பியுள்ளார்கள். இத்தகைய திருவடிப் பூஜைகள் மாகேஸ்வர பூஜையுடன் நிறைவுறும்.

## பாதயாத்திரை

22.08.2006 அன்று நல்லூர்த் தேர்த்திருவிழாவை முன்னிட்டு பாதயாத்திரையானது ஏழாலை இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் கோயிலிலிருந்து ஆரம்பமாகி ஆத்மஜோதி மணிமண்டபம் ஊடாக குப்பிளான் சந்தி, புன்னாலைக்கட்டுவன் சந்தி ஊடாகப் பலாலி வீதி வழியாக நல்லூரைச் சென்றடையும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

*ஏழாலை ஆத்மஜோதி*
*மணிமண்டப சபையினர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் திருமந்திரம்

## குறிக்கோள்

இன்றைய உலகம் மிகவும் பிஸி வேல்ட்! எங்கே பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் ஏதோ அதிவேகமான காரியங்கள் நடந்துகொண்டிருப்பது போல் தோன்றுகிறது. தெருக்களிலே எத்தனை வண்டிகள். போக்குவரத்து நெரிசலைத் தாங்கமுடியவில்லை. போதாக்குறைக்கு எல்லோருடைய கழுத்தைச் சுற்றி மொபைல் போன்; பேசிக்கொண்டே இருக்கிறார்கள்; இந்தியர்கள்தான் உலகத்திலேயே அதிகமாகப் பேசுகின்றார்கள் என்று கணக்கெடுக்கப்பட்டாலும் வியப்பில்லை. இதற்கு மேலாக ரி.வி. நிகழ்ச்சிகளைப் பார்த்தாக வேண்டும். அதற்கு நேரம் ஒதுக்கியாக வேண்டும். மெகா சீரியல்களில் சுவாரசியமான கட்டங்களை மிஸ் செய்யக் கூடாது. நம் குழந்தைகளைப் பாருங்கள். வண்டி புத்தகங்களைப் பாருங்கள். வண்டி புத்தகங்ளைத் தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடம் போகிறார்கள். எல்லாவற்றையும் ஒருமுறை கூட படிக்க நேரமில்லை. ஆழ்ந்த கருத்துக்களையெல்லாம் எப்படித் தீவிரமாக சிந்திப்பது?

நமது வாழ்க்கையில் குறிக்கோள் என்பது ஏதாவது உண்டா? இல்லை. வாழ்ந்து மண்ணோடு மண்ணாக மறைவதுதான் நமது குறிக்கோளா?

விக்டர் ஃபிராங்கல் என்பவர் உலகப் புகழ் பெற்ற மனோதத்துவ நிபுணர். ஆஸ்திரியா நாட்டில் வியன்னா நகரில் மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு நிவாரணம் அளிக்க புதிய உத்திகளை மேற்கொண்டு, உலக சாதனை செய்தவர். இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியர்களால் பிடிக்கப்பட்டு, சிறைச்சாலையில் ஆயிரக்கணக்கானவர்களோடு சேர்த்துவைக்கப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டார் விக்டர். வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனும் தன்னை உயர்த்திக்கொள்வதற்காக வைத்துக்கொள்ளும் குறிக்கோளே அவனுக்குப் பொறுமையையும், வலுவையும் கொடுக்கிறது என்று கண்டுகொண்டார். தனது அனுபவத்தை "மனிதன் தேடும் அர்த்தம்" என்ற தலைப்பில் ஒரு மகத்தான நூலாக வெளியிட்டார். முப்பது லட்சம் பிரதிகள் விற்பனையாயின.

திருவள்ளுவர், எப்பொருளாயினும், அப்பொருளின் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றார்.

சிவமாம் தன்மையைப் பெற்ற சிவனடியார்களுக்கு மெய்ப்பொருள் என்பது சிவப்பரம்பொருளே. அதை மேலும் மேலும் சிந்தித்து இன்புறுவதையே குறிக்கோளாகக் கொள்வார்கள். அதற்கு மேலான இன்பம் இல்லை என்றே அவர்கள் நினைப்பார்கள். வாழ்க்கை நீரோட்டத்தில் அவர்கள் இருப்பார்கள். ஆனால், எதிர்நீச்சல் போடுவதில்லை. அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் தன்மையுடையவர்கள் தம்மை முன்வைத்து சாதனைகளை கணக்குப் போடமாட்டார்கள். எந்தப் பண்புகளால் உயிரின் வளர்ச்சி, பக்குவம் ஆகியவை சிறப்படையுமோ, அவற்றை வளர்ப்பார்கள். மற்றவற்றைத் தவிர்ப்பார்கள்.

இறைவன் திருவடிகளை என்றும் தனது சிந்தனையில் வைத்துக் கொள் கிறேன் என்பார் திருமூலர். திருவருளும் திருவருள் துணையுடன் கிடைக்கும் இறைவனைப் பற்றிய அனுபவ ஞானமும் திருவடிகளாகக் கருதப்படுகின்றன. திருமூலர் இவற்றை மனதில் மட்டும் வைத்துக்கொள்ளவில்லையாம். மனம் என்பது அறிவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம். அங்கே புலன் அறிவும் சேர வாய்ப்பு உண்டு. உலக ஞானமும் வந்து கலக்கலாம். மனத்தூய்மை முழுமையாக இராது.

எனவே திருமூலர் இறைவனுடைய திருவடிகளை தன் நெஞ்சத்திலும் வைப்பராம். நெஞ்சம் என்பது உள்ளம். இதயத்தானம், உணர்வுகள் நிறைந்த இடம். உயிரின் துடிப்பை அங்கே பிடிக்கலாம். திருவருளும் ஞானமும் ஆழச் செல்கின்றன என்பது பொருள்.

மனதிலும் உள்ளத்திலும் திருவருள் நிரம்ப இறைவனை வாயால் துதிக்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. அது போதுமா? கைகள் தம் பணியாற்ற வேண்டுமே! இறைவன் விரும்புவது மலர்கள். பல மலர்களைப் பறித்து திருவடிகளில் சமர்ப்பித்து மகிழ்ச்சியால் மனம் நெகிழ்ந்து அடிபணிந்து நிற்கத் தோன்றுகிறது.மனம், உள்ளம், வாய், கைகள் எல்லாமும் செயல்பாட்டில் இறங்குகின்றன. உடல் சும்மா இருக்குமா, பாடி ஆடவேண்டும் என்ற அவா பிறக்கின்றது. இவ்வாறு கடவுளைப் பணிந்து திருவடிகளை மனத்திலும் உள்ளத்திலும் வைத்து, இறைவா இறைவா என்று கூவிக் கொண்டு மலர்களால் அர்ச்சித்து, பாடியும் ஆடியும் செய்து, வழிபடுவதைத் தவிர மேலான குறிக்கோள் ஒன்று இவ்வுலகில் இருக்க முடியுமா? இல்லை என்பார் திருமூலர். ஆகவே இந்த இறைவழிபாட்டுச் செயல்களைத் தவிர வேறு ஒன்றையும் நான் அறியேன் என்கிறார்.

*"சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று*
*பாடுவன் பன் மலர் தூவிப் பணிந்து நின்*
*றாடுவன் ஆடி அமரர் பிரான் என்று*
*நாடுவன் யான் இன்று அறிவது தானே"*

# அருள்பெற ஒரு வழி

அப்போது நான் ஒரு பள்ளிக்கூட மாணாக்கன். எனது பாட்டி ருத்ராக்ஷமாலை ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு சதா 'நமசிவாய' மந்திரத்தைச் சொல்லி வந்தார். அவ்வப்போது "இதைச் செய் அதைச் செய்" என்று அருகில் இருந்தவர்களுக் கெல்லாம் உத்தரவு கொடுத்து வேலைசெய்ய வைத்தார்.

"பாட்டி ஜபத்தில் கவனம் வைக்கவேண்டும். இல்லாவிட்டால் வேலையைக் கவனிக்க வேண்டும். நீங்கள் இரண்டையும் சேர்ப்பது எனக்குப் புரியவில்லையே என்றேன்.

"போடா, குழந்தே! நான் வெளியிலே எப்படி இருந்தாலும் மனம் மந்திரத்திலேதான் லயித்து இருக்கும்" என்றாள் பாட்டி. எனக்கு இளமையிலேயே கிடைத்த ஒரு சிறந்த பாடம்.

எங்கள் ஊர் காவிரி ஆற்றங்கரையில் இருக்கிறது. இந்தப் பாடத்தை அங்கேயும் பார்க்கலாம். பெண்கள் துணிகளைத் தோய்த்துக் குளித்துவிட்டு ஒரு குடத்தில் நீரை நிரப்பி ஒரு கையால் அணைத்துக்கொண்டு, ஒரு தோளில் துணிகளைப் போட்டுக் கொண்டு, தலையில் நீர் நிரம்பிய குடத்தை வைத்துக்கொண்டு மற்றப் பெண்களுடன் பேசிக்கொண்டு வருவார்கள். ஆனாலும் அவர்களுடைய கவனமெல்லாம் தலையில் இருக்கின்ற குடத்தின் மீதே இருக்கும். கீழே விழாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே! ஆனால் அவர்களுடைய நடையில் தடுமாற்றம் ஒன்றும் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணன் மீது பேரன்பு கொண்ட கோபியர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் எல்லாக் காரியங்களைச் செய்து வரும்போதும் சிந்தனையைக் கண்ணனிடம் வைத்துவிடுவார்கள். அவர்களுடைய நெஞ்சத்தில் கண்ணனைத் தவிர வேறொன்றுக்கும் இடம் இராது. அவர்களுடைய உள்ளத்துச் சிந்தனைகளை வேறெவரும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு ஆழமாகப் பதிந்து வைத்திருப்பார்கள்.

இறைவன் உள்ளத்தில் கோயில் கொண்ட பிறகு பிற சிந்தனைகளுக்கு இடம் ஏது?

திருஞானசம்பந்தர் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் தலத்தை அடைந்தார். அங்கே வாழ்ந்த மழவநாட்டு மன்னனுடைய மகள் முயலகன் என்ற நோயால் பாதிக்கப்பட்டு மிகவும் வருந்தினாள். அவளுடைய உடல் உறுப்புக்களில் அசைவில்லை. பெண் செயலற்றுக் கிடந்தாள். தன் மகளை இறைவனிடம் ஒப்படைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று மன்னன் அவளை கோயிலுக்குக் கொண்டு வந்து சந்நிதியில் கிடத்தினான். திருஞானசம்பந்தர் அங்கே வரவும் அவரிடம் மன்னன் தன் பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டினான்.

திருஞானசம்பந்தர் அந்த அழகான பெண்ணைப் பார்க்கிறார். அவள் செயலற்றுக் கிடந்தாள். அவளை உன்னிப்பாகக் கவனிக்கிறார். உடல் சடலம் போலக் கிடந்தாலும் அவளுக்கு சிவபெருமான் மீது இருந்த அன்பை உணர்கிறார். அவள் சிவப் பரம்பொருளையே சிந்தித்த வண்ணமாக இருக்கிறாள். சிவ நாமத்தைத் தவிர வேறொன்றையும் அவள் பேசவில்லை என்பதையும் பார்க்கிறார். அத்தகைய அன்புக்கு அவள் அவதிப்படும் நோய் இறைவன் தந்த பரிசாக இருக்க முடியாது. திருப்பதிகம் பாடுகிறார். மங்கையும் நோயிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியடைகிறாள்.

முயலகன் ஒரு கொடிய நோய். உடலைச் செயல்படவிடாமல் கட்டுப்படுத்தும் நோய். தத்துவரீதியாக முயலகன் ஆணவத்தைக் குறிக்கின்றது. ஆன்மாவை அறிவிழக்கச் செய்கிறது. திருவருள் துணையுடன்தான் ஆன்மா, முயலகன் தரும் அறியாமையிலிருந்து விடுதலை பெற இயலும்.

திருவருள் துணையை நாடவேண்டும். ஐந்தெழுத்து மந்திரம் உள்ளத்தை நிரப்பவேண்டும். நெஞ்சம் எதை நினைக்கின்றதோ அதை வாய் பேசும். மழவன் மகள் ஈசன் அன்பிலே உயர்ந்தவள். அவளுடைய மனம் ஐந்தெழுத்து மந்திரத்தில் வேரூன்றி நின்றது. அவளது வாய் அதையே சொன்னது. இறைவா சிவபெருமானே எம்பிரானே என்றெல்லாம் வாழ்த்திக்கொண்டே இருக்கவேண்டும். உயிர் போகும் தறுவாயிலும் இதை இயல்பாகச் செய்யும் அளவுக்கு மனதிற்குப் பயிற்சி கொடுத்து பக்குவம் அடையச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மேகங்கள் தவழும் வெள்ளி மலை மீது வீற்றிருக்கும் சிவபெருமானுடைய திருவருளை எளிதில் பெற்று, இன்பம் அடையலாமே! இதைச் செய்வோம் என்கிறார் திருமூலர்.

"நெஞ்சு நினைந்து தம் வாயாற் பிரான் என்று
துஞ்சும் பொழுதுன் துணைத்தான் சரண் என்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை
அஞ்சில் இறைவன் அருள் பெறலாமே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைந்துண்ணும் காக்கை போல் கரைகின்றேன்

அருட்பெருஞ்ஜோதி ! அருட்பெருஞ்ஜோதி! தனிப்பெருங் கருணை! அருட்பெருஞ்ஜோதி!

அழியாத பரம்பொருளை அழியக்கூடிய இவ்வுடலில்தான் காண வேண்டும். மெய்யாம் இந்த உடலில் மெய்யான இறைவனைக் காணாமல் மெய் உடலைப் பொய் என்று நம்பிப் பொய்யாகிப் போய்விடாதீர்கள். மெய்யாம் உடலில் மெய்ப் பொருளாம் இறைவனைக் கண்டு, மெய்ப்பொருளுடன் கலந்து மெய்சிலிர்த்து, மெய்யாகிப் பேரின்பம் பெற வேண்டும். இது சாத்தியமா? இது முடியும். மனிதப் பிறவியால்தான் முடியும். இது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒருநாள் சாத்தியம் ஆகும். இது நிச்சயம். இது சத்தியம்.

உடலைக் கொடுத்து இன்பதுன்பம் அனுபவிக்க வைக்கிறார் இறைவன். உடல் இருந்தால்தானே உணர்வுகள் இருக்கும். அதனால், தன் குழந்தைப் பேரின்ப ஆனந்தமும் இந்த உடலில் உள்ள போதே அனுபவமாக உணர்ந்து மகிழ வேண்டும் என்று இறைவன் விரும்புகிறார். அதனால் இறைவன் தானே உவந்து வந்து தனது சேயினை அணைத்து உடல் பந்தம் விடுவிக்க வைத்து உடலைக் கடந்து வெளியே சென்று, சிரசினைத் தாங்கி, சிரசின் உச்சியினில், ஆனந்தஜோதித் தாண்டவம் ஆடுகிறார்.

இந்த ஆனந்தத் தாண்டவத் திருவடிப் பேரின்பத்தை அனுபவித்து, பிறப்பு இறப்பு அற்ற மரணம் இல்லாப் பேரின்ப ஆனந்தம், ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்பதை அனுபவமாக உணர்ந்து அவரவர் அனுபவமாம் பேரின்பப் பேரானந்தப் பெருமை கொள்வது, உடலினில் இருக்கும்போதுதான் உணர்ந்து அனுபவிக்க முடியும். நிலம்,நீர்,நெருப்பு,காற்று,ஆகாயம்,சந்திரன்,சூரியன், ஆன்மா இவையாவும் பரஞ்ஜோதியாம் பரமன் திருமேனியாய் அருள் ஞானப் பெருவெளியாம் அருட்ஜோதி ஆகும்.மனதில் மாசுகள் நீங்கிய தருணம் தன்னையும் தலைவனை யும் அறியும் அருள் வரும். தன்னலம் அற்ற தூய்மையாம் தியாகம் துறவாமல் துறக்கும் சன்னியாசம் ஆகும்.உலகில் வேள்வியினில் மிஞ்சுவது சாம்பல். உடலில் வேள்வியினில் மிஞ்சுவது அமிர்தம். அமிர்த உடல் ஆக்கி இறைவனுக்கு உடலைச் சமர்ப்பணம் செய்வதுதான் சிவசாயுஜ்யம்.

தாய் போன்ற குணம் கொண்டால் தாயாகலாம் இறைவனின் குணம் கொண்டால் இறைவன் ஆகலாம். இறைநிலையில் வாழ்ந்து மறைவது பேரின்ப நிலையாகும். பிறப்பு இறப்பு அற்ற மரணமில்லாப் பேரின்பத் திருவடி இன்ப வாழ்வே சிவசாயுஜ்யம் ஆகும். சிவ அனுபவம் ஆன வாழ்வு மறை நிலை ஆகும்.சிவனுடன் கலந்தால் சிவன்நிலை ஆகும். சிவன் நிலை பெறுவது சாத்தியமே. ஒவ்வொரு மனிதனும் சாயுஜ்யம் பெறலாம். மனிதனின் நிலை முடிவில் மறைவதுதான் இறைவனுடன் இரண்டறப் பிரிவின்றிக் கலந்த பேரின்பம் அனுபவித்து மறைந்து விடும் ஆனந்தமே நிலையான முடிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப்பிறவி சிறந்த பிறவி. அபூர்வ செல்வமாம் அறிவு நம் ஆண்டவன் அளித்த ஆறாம் அறிவு. ஆறாவது அறிவு படைத்த மனிதப் பிறவியில் தான் நாம் இறைவனை நம் தெய்வீகத் தாய் தந்தையைக் கலந்து கொண்டு பேரின்ப ஆனந்தம் அனுபவிக்க முடியும். மனிதர்களாகிய எல்லோரும் இப்படி இறைவனைக் கலந்து கொண்டு திருவடிப் பேரின்ப ஆனந்தம் அனுபவிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால், யான் பெற்ற இன்பம் இந்த வையகமும் பெற வேண்டுமென்ற துடிப்பினால், அடியேன் **கரைந்துண்ணும் காக்கை போல் கரைகின்றேன்.** அடியேன் **பகிர்ந்துண்ணும் காக்கைப் போல பகர்கின்றேன்.**

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

# சோமாஸ்கந்த மூர்த்தம்

முருகப்பெருமான் தனது தாய் தந்தையாகிய சிவன், உமை இருவருக்கும் நடுவில் இருந்து காட்சி தரும் மூர்த்தமே சோமாஸ்கந்த மூர்த்தம் ஆகும். இம்மூர்த்தம் ஷ+உமா+ஸ்கந்தா எனப் பிரிக்கப்பட்டு உமை, முருகன், இறைவன் எனப்பொருள் கொள்ளப்படும். இத்திருமேனி எல்லாக் கோயில்களிலும் பெரும்பாலாக வைத்து வழிபாடாற்றப்படுகின்றது.

இம்மூர்த்தம் அருமை, எளிமை, அழகு எனும் தத்துவங்களை விளக்கி நிற்கின்றது. அதாவது அருமை சிவன், எளிமை-சக்தி, அழகு-முருகன் என்பன. அவை கடந்தநிலை, கலந்தநிலை, கவர்ந்தநிலை மூன்றையும் விளக்கும். கடந்த நிலையாவது எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு நிற்கும் நிலை இது சிவனையும், எல்லாவற்றுடனும் இயைந்து நிற்கும் நிலையாகிய கலந்தநிலை சக்தியையும், தம்மை வழிபடுவதற்கு காட்சி தந்து அவர்களோடு இணைந்து நிற்கும் நிலையாகிய கவர்ந்தநிலை முருகனையும் இப்பொருள் உண்மை, நன்மை, அழகு என முறையே சிவன், சக்தி, முருகன் என பண்புகளை உணர்த்தி நிற்கின்றன.

இம்மூர்த்தம் உணர்த்தும் தத்துவங்களில் இன்னுமோர் உண்மை குடும்ப தத்துவமாகும். கணவன், மனைவி, குழந்தை ஆகிய முப்பொருள் தன்மையே இல்லற வாழ்வின் சிறப்பு ஆகும். இவ்வாழ்வின் சிறப்பினையே சிவன், உமை, முருகன் ஆகிய மூன்று திருமேனிகளும் இணைந்து இருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தம் உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய வழிபாட்டின் சிறப்பு

பௌதிக கலாசாரத்தில் சூரியன் மகாகொதி நிலையிலுள்ள வாயுக்கள் நிரம்பிய ஒரு கோளம். வாயுக்கள் சிதறிப் பரவுவதே அவற்றின் இயற்கை. மூடிய ஒரு பாத்திரத்தில்தான் வாயுவைப் பரவாமல் இருத்தி வைக்க முடியும். ஆனால் சூரியனிலோ வாயுக்கள் ஒன்று திரண்டிருப்பது நம் பாக்கியம். அதி உஷ்ணமான இந்த வாயுக்கோளம் நமக்கு உணவும் உயிரும் தருவதற்காகத் தினமும் உதயமாகிறது. பௌதிகத்தின் ஆராய்ச்சிப் பொருளான இதே சூரியன், வேத சாஸ்திரங்களிலும் முக்கியமான இடம்பெறுகிறான். தியானத்துக்கும் சேவைக்கும் உருவமான பூணூல் தரிக்கும் போது இந்து ஒவ்வொருவனும் உபதேசம் பெறும் காயத்ரி மந்திரத்தின் விஷயம் சூரியபகவான் 'தியானத்திற்குரிய சூரிய பகவானுடைய ஒளி என் உள்ளத்தில் புகுந்து என் சிந்தனைகளைத் தூண்டி விடுவதாக' என்பதே காயத்ரி ஜபத்தில் அடங்கிய பிரார்த்தனை தியானம் செய்து துதிப்பதற்காக இப்பிரார்த்தனையை நமது முன்னோர்களுக்கு விசுவாமித்திர மகரிஷி வழங்கினார்.

உயிரற்ற கொதிவாயுக் கோளமே சூரியன் என்பது தற்கால பௌதிகம் சொல்கிற பாடம். ஆனால் தியான அனுபவம் வாய்ந்த நமது முன்னோர்களோ, சூரிய ஜோதிக்குப் பின் ஒரு தெய்வம் இருப்பதாக உறுதியாகக் கருதினர். நம்முடைய உலகத்தை சிருஷ்டித்து உயிர்களை ஜீவனுடன் இயக்கி வரும் சூரியன், காட்சிக்கு எட்டாத பரம்பொருள் நம் கண்ணுக்குத் தெரியும் வண்ணம் கொண்ட பிரத்தியட்ச வடிவம் என்றார்கள். சூரியன் என்பது நம் கண்ணுக்குக் கோசரமாகும் பிரம்மம். எந்த அரசியல்வாதியாயினும் சரி, மாணாக்கனாயினும் சரி, அவர்கள் வேறெந்தச் செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் தினந்தோறும் காலையும், மாலையும் சூரியன் நமக்குத் தரும் சாந்தமான காட்சியை அனுபவித்துத் தனக்குள்ளேயே மௌனமாக விசுவாமித்திரர் தந்த மகா மந்திரத்தை மனனம் செய்வதால் பகுத்தறிவை இழந்துவிட மாட்டார்கள். மந்திரத்தின் உட்பொருளில் ஆழ்ந்து ஜெபிக்க வேண்டும். சூரியன் ஒரு தேவன், முனிவர்கள் எந்தப் பரம்பொருளின் உட்கலப்பதற்காகத் தவமிருந்தனரோ அந்தப் பரம்பொருளின் பிரதிநிதியே சூரியன் என்பது நம் முன்னோர் துணிவு. கொடிய விலங்குகள் போல் நம்மை விழுங்கக் காத்திருக்கும் பாவங்களினின்று காயத்ரி பிரார்த்தனை நம்மைக் காப்பாற்றும். இந்த உலகமும் உயிர் வாழ்க்கை அனைத்தும் சூரியனைச் சார்ந்தவையே. சூரியனில் உள்ள ஆண்டவன் நம் மனத்தில் பிரவேசித்து நம்மைத் தீமையிலிருந்து காப்பானாக!

**சமூகஜோதி கா.கணேசதாசன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜத்தை நேசி..... பொய்மையைப் புதை!

பிறர் தன்னைப் புகழ வேண்டுமென்ற எதிர்பார்ப்பு தவறே அல்ல. ஆனால் வலுக் கட்டாயமாகப் புகழ வைப்பது ஓர் ஆக்கிரமிப்பு. அது உண்மையான வெற்றியாகாது. இன்று வெற்றி பெறாமலேயே தங்களை வெற்றியாளர்களாகக் காட்டிக் கொள்ளப் பலர் விரும்புகிறார்கள். நட்பே உனக்கு அப்படி ஓர் எண்ணம் வேண்டாம்.

இதோ தெளிவாக விளக்குகிறேன். பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் தமது உரைகளை உதவியாளருக்குச் சொல்லி எழுதச் செய்கையில் சில இடங்களில் "கை தட்டல்" என்று குறிக்கச் சொல்லுவார். தன் வெற்றியைப் பற்றிய தீர்க்கமான தீர்மானம் அது. கை தட்டல் என்று குறித்துக் கொள்ளும் போது ஆரம்பத்தில் அவரது உதவியாளர் திகைப்படைந்தார். ஆனால் சர்ச்சிலின் கணிப்பு ஒருபோதும் பொய்யாவ தில்லை என்பதைக் கண்டு பின்னர் அவர் வியப்படைந்தார். புகழத் தக்கவன் என்ற இந்தக் கணிப்பு தவறில்லை. ஆனால் கை தட்ட வேண்டிய இடத்தில் கை தட்ட ஆள் செட் அப் செய்திருந்தால் அசிங்கம்... அநாகரிகம். அப்படி ஜெயிக்காதீர்கள்.

தகுதி இருந்தும் செயற்கைப் புகழ் தேடுவது தவறு. தகுதியே இல்லாமல் வெற்றியாளனைப் போல் காட்டிக் கொள்வது தவறல்ல, போக்கிரித்தனம். அது ஆபத்தான அணுகுமுறையும் கூட புதுப் பணக்காரர்கள் நாலு காசுகளை வீசி எறிந்தால் புகழ்ந்து தள்ளத் தமிழ்ப் பேச்சாளர்கள் சிலர் தலையைச் சொறிந்துகொண்டு முன் வருகிறார்கள். இது கறுப்புப் புகழ், கள்ளத்தொடர்பு, கண்டிக்கத்தக்கது. மீண்டும் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். பாராட்டுக்கும் புகழுக்கும் தான் தகுதி உடையவன் என்ற தெளிவு, உங்களை உயர்த்தும். ஆனால் அதற்கான ஏற்பாடு உங்களைத் தாழ்த்தும். புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் மார்க்ட்வெயின் வாழ்க்கையில் அப்படி ஒரு சுவையான நிகழ்ச்சி.

அவருக்குப் பிரெஞ்சு தெரியாது. அந்தக் காலத்தில் பிரெஞ்சு என்பது ஒவ்வோர் ஆங்கிலக் கலைஞனுக்கும் சின்ன வீடு மாதிரி. மார்க்ட்வெயினின் எழுத்துக்களைப் பாராட்டி பாரிசில் ஒரு மிகப் பெரிய விழா நடந்தது. விழா நடந்த அதே பல்கலைக் கழகத்தில்தான் மார்க்ட்வெயினின் மகன் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்குப் பிரெஞ்சு மொழி நன்கு தெரியும்.

மகனை அழைத்து "எனக்குப் பிரெஞ்சு தெரியாது. பிரான்ஸ் மக்கள் மொழிப்பற்று மிக்கவர்கள். எனவே பேசுகிற எல்லாரும் பிரெஞ்சில்தான் பேசுவார்கள். நான் ஒரு முட்டாளைப் போல அங்கே இருக்கவேண்டியிருக்கும். ஆனால் எனக்குப் பிரெஞ்சு தெரியாது என்பது அவர்களுக்குத் தெரியக்கூடாது. எனவே நீ என் பக்கத்தில் இரு. எனக்குச் சைகை காட்டு. நீ சிரித்தால் நானும் சிரிப்பேன். முகத்தை சீரியஸாக வைத்துக்கொண்டால் நானும் அப்படியே சமாளித்து விடலாம் என்றார் மார்க்ட்வெயின்.

ஆனால் விழா நடந்த போது தர்மசங்கடம் ஒன்று நேர்ந்து விட்டது. விழாவில் பேசியவர் மார்க்ட்வெயினை ஓஹோ என்று புகழ்ந்த போது சபையே கை தட்டியது. மகனும் கை தட்டினான். அவனைப் பார்த்த மார்க்ட்வெயின் தன்னைப் புகழுகிறார்கள் என்று தெரியாமலேயே கை தட்டினார். சபை இதைப் பார்த்துச் சிரித்தது. இந்தச் சங்கடம் அடிக்கடி அரங்கேறியது. மகன் நெளிய ஆரம்பித்தான். பலர் இந்தக் கூத்தைப் பார்த்துச் சிரிக்கும் போது மகனாலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. மகன் சிரிக்கும் போதெல்லாம் ஒப்பந்தப்படியே மார்க்ட்வெயினும் சிரித்தார். மக்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். மகனுக்கு அவமானத்தால் வியர்த்துக்கொட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைக்குத் திரும்பியதும் தந்தையிடம் கோபமாக, "என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? உங்களை "ஆஹா, ஓஹோ" என்று புகழும் போது நான் கை தட்டாமல் இருக்க முடியுமா? நீங்கள் கை தட்டினால் அசிங்கம் இல்லையா? உங்களைப் பெரிய மகான் என்று ஒருவர் பாராட்டினார். நீங்கள் கையை உயர்த்தி பிரமாதமாகக் கை தட்டுகிறீர்கள். என் சக மாணவர்கள் என்னை எப்படிக் கேலியாகப் பார்த்தார்கள் தெரியுமா?" என்று சீறினான் மகன். அமைதியாக மார்க்ட்வெயின் சொன்னார். "வருத்தப் படாதே... என் வாழ்க்கையில் இப்போதுதான் முதல் முதலாக நான் உண்மையாக நடந்திருக்கிறேன். நான் செய்ய விரும்பியதை இன்றுதான் செய்திருக்கிறேன். மேடைகளில் என்னைப் புழும் போது பிறர் கை தட்டுகையில் நானும் கை தட்ட விரும்பியதுண்டு. ஆனால் மொழி புரிந்ததால் தட்டியதே இல்லை. முதல் முதலாக மொழி புரியாததால் தவறாக ஓர் உண்மை அரங்கேறிவிட்டது" என்றார்.

ஒரு முக்கியமான உண்மை. தான் புகழத்தக்கவன் என்கிற தீர்மானம் பிறர் புகழும் போது ஏற்படவில்லை. எழுதும் போதே தனக்கு ஏற்பட்டது என்று புகழின் நுட்பமான இரகசியத்தை மார்க்ட்வெயின் புரிய வைத்தார்.

நாதஸ்வர மேதை திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை அவர்களைப் பற்றி ஒரு செய்தி உண்டு. அவருக்கு ஜனாதிபதி விருது கிடைத்த போது அவரை ஒரு நிருபர் பேட்டி கண்டார். "நீங்கள் பெற்ற பாராட்டுக்களிலேயே உயர்வானது இது தானே" என்றார். கொஞ்சம் யோசித்து விட்டு ராஜரத்தினம் பிள்ளை சொன்னாராம் "ஒரு கல்யாணத்திலே நான் நாதசுரம் வாசித்த போது நரிக்குறவர் ஒருவர் வெளிச்சத்துக்கு கியாஸ் லைட் தாங்கிக் கொண்டு வந்தார். தோடி ராகம் வாசிக்கும் போது நான் ஒரு பிருகா அடிச்சேன். சந்தோஷத்தில் இந்த மனுஷர் கியாஸ் லைட்டைத் தூக்கிப் போட்டுப் பிடிச்சு "ஆஹா" அப்படீன்னார். அது தான் எனக்கு கிடைச்சப் பாராட்டுக்களிலேயே உசத்தி" என்றார். "இந்த ஜனாதிபதி விருது" என்று நிருபர் இழுத்தவுடன்... "ஜனாதிபதி என்ன ஜனாதிபதி. அவர் என் வாசிப்பைக் கேட்டுட்டா கொடுத்தார். யாரோ கொடுக்கச் சொன்னார்கள்..... எடுத்துக் கொடுத்தார். அவ்வளவுதான்" என்று ஒரு போடு போட்டார்.

நிஜமான புகழ்..... நிஜமான புகழ்..... வெற்றியின் வேர். பொய்யான புகழ்..... பொய்யான புகழ்..... தோல்வியின் தாய். புரிந்தவருக்கு வெற்றி நிச்சயம்.

## ஆவணிமீ 01.08.2006

2.8.2006 சேரமான் பெருமான் குருபூசை
2.8.2006 சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை
4.8.2006 வரலஷ்சுமி விரதம்
5.8.2006 ஏகாதசி விரதம்
7.8.2006 பிரதோஷ விரதம்
8.8.2006 பட்டினத்தார் குருபூசை
நல்லூர் கந்தசுவாமி மஞ்சம்
9.8.2006 பூரணை விரதம்
12.8.2006 சங்கடஹர கணபதி விரதம்
16.8.2006 கார்த்திகை விரதம்
18.8.2006 நல்லூர் கந்தசுவாமி, கைலாய வாகனம்
19.8.2006 ஏகாதசி விரதம்
21.8.2006 பிரதோச விரதம்
22.8.2006 நல்லூர் கந்தசுவாமி தேர்
23.8.2006 அமாவாசை விரதம்
27.8.2006 விநாயகர் சதுர்த்தி
29.8.2006 ஷஷ்டி விரதம்
31.8.2006 அட்டமி நவமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்திசூடி

காப்பு

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

ஆத்திசூடி — திருவாத்திப்பூமாலையை அணிந்த சிவபெருமான்; அமர்ந்த தேவனை — விரும்பிய பிள்ளையாகிய விநாயகக் கடவுளை; ஏத்தி ஏத்தி — துதித்துத் துதித்து; யாம் தொழுவோம் - நாங்கள் வணங்குவோமாக.

**தொடர்ச்சி.......**

**22. பருவத்தே பயிர் செய்.**

பருவத்தே — பொருத்தமான காலத்திலேயே பயிர் செய்- அவ்வப்பயிர் வகைகளை உற்பத்தி செய். (உரிய காலத்தில் செய்தற்குரிய கடமைகளைச் செய்).

**23. மன்று பறித்து உண்ணேல்.**

மன்றுபறித்து — நீதிமன்றில் பொய்ச்சாட்சி கூறி. உண்ணேல் - அவ்வருவாயைக் கொண்டு உண்டு வாழாதே.

**24. இயல்பு அலாதன செயேல்.**

இயல்பு அல்லாதன — நல்லோரின் இயல்புக்கு மாறுபட்ட செயல்களை. செய்யேல்- செய்யாதே.

**25. அரவம் ஆட்டேல்.**

அரவம் - பாம்போடு. ஆ(ட்)டேல் - விளையாடாதே.

**26. இலவம் பஞ்சில் துயில்.**

இலவம் பஞ்சு பொதிந்த மெத்தை, தலையணை என்பன நித்திரை செய்வதற்கு ஏற்றவையாகும்.

**27. வஞ்சகம் பேசேல்.**

பிறரை ஏமாற்றும் வஞ்சக வார்த்தைகளைப் பேசாதே.

**28. அழகு அலாதன செயேல்.**

அழகு அ(ல்)லாதன — பிறர் கண்டு இகழும் படியான செயல்களை. செ(ய்)யேல்-செய்யாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையே கூடாதா!

இந்து மதத்தில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்குக்கும் இடமுண்டு. ஆசைகளை முற்றும் துறத்தல் என்பது துறவிகளுக்குச் சொல்லப்பட்டது. அது எல்லோருக்கும் சொல்லப்பட்டதல்ல. இல்லறத்தில் இருப்பவர்கள் இல்லற தர்மங்கள் எவையோ, அவற்றை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். சாதாரண மனிதன் ஆசையே இல்லாமல் உலகில் வாழ முடியாது. ஆனால் அந்த ஆசை அளவுக்குட்பட்டதாகவும், முறை தவறாததாகவும், நியாயமான தாகவும் இருக்கவேண்டும். முறை தவறிய பெண்ணாசை கூடாது என்பதற்கு ராவணன் உதாரணம். முறை தவறிய மண்ணாசை கூடாது என்பதற்குத் துரியோதனன் உதாரணம். உலகில் ஆசையை அழித்தவர்களும் உண்டு; ஆசையால் அழிந்தவர்களும் உண்டு.

# கருட தரிசன முறையும் அனுகூலமும்

தெய்வ பட்சியான கருடனைக் காணும் போது கைகூப்பி வணங்கக் கூடாது. வலது கை மோதிர விரலால் மூன்று முறை தொட்டுக் கொண்டு இந்த சுலோகத்தைச் சொல்க.

"குங்குமாங்கித வர்ணயகுந்தேந்து தவளாயச விஷ்ணு வாஹ
நமஸ்துப்யம் பக்ஷிராஜாயதே நம"

ஞாயிறு அன்று கருடனைத் தரிசித்தால் நோய் அகலும். திங்கள், செவ்வாய் கண்டால் துன்பம் நீங்கிப் பிணி தீரும். புதன், வியாழன் கண்டால் பில்லி, சூன்யம், ஏவல் தீரும். வெள்ளி, சனிக் கிழமைகளில் பார்த்தால் பூரண ஆயுள், சம்பத்து இவை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வெளியீடுகள்

- ஆத்மஜோதி
- ஏழாலை
- ஈழத்துச் சித்தர்கள்
- முப்பெரும் சித்தர்கள்
- நவராத்திரிப் பாமாலை
- கேதாரபத்திரி யாத்திரை
- இந்தோனேசியாவில் 2 வருடம்
- திருமுறைக் கதைகள்
- அர்ச்சனை மாலை ஆத்மஜோதி மண்டப வெளியீடுகள்
- பிள்ளையார் பெருங்கதை
- சிறுவர்களுக்கேற்ற பிள்ளையார் கதை
- புதிய சைவ வினாவிடை ①
- விதியை வெல்வது எப்படி
- கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்



பசுவதையை நிறுத்துவோம்
பசுவைக் காப்போம்.



ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்
ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்

இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு.நா.முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணம்: ஐய்ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org